கருத்துக்களைத் தெரிவிப்பது தவறு. அவற்றுக்கு ஆதாரமும் இல்லை; உள் நோக்கம் கற்பிக்கின்ற கருத்துக்களாகப் பேரவையில் எடுத்துச் சொல்ல அனுமதிக்கப்பெற்றால், நாளைய தினம் மற்றவர்களும் இது போல எடுத்துச் சொல்கிறபோது, இதே பிரச்னை தான் தொடர்ந்து வரும்; எனவே, தாங்கள் பரிசீலித்து பின்னர் இதுபற்றிச் சொல்வதாக இருந்தால் ஏற்றுக் கொள்கிறேன். பரிசீலிக்கத் தேவையில்லை, அது அவைக் குறிப்பிலே இடம் பெறும் என்று சொன்னால், நான் அதற்கு எதிர்ப்பாக விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் வரும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வின்சென்ட் அவர்கள் பேசும்போது, உறுப்பினர் **, *** என்று இரண்டு முறை சொன்னார்கள். அது பார்லிமெண்டரி வார்த்தையா? அது அவைக் குறிப்பிலே ஏறுவது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவற்றை எல்லாம் பரிசீலித்து பிறகு நான் தீர்ப்பளிக்கிறேன். (குறுக்கீடு) பரிசீலிப்பதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. நான் பரிசீலித்து அறிவிக்கின்ற வரையில், அவை எதுவும் பிரசுரம் ஆகாது.

டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 246ன் **கீழ் மீது அவை உரிமை மீறல் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகனுக்குச் சொன்ன தீர்ப்புத்தான் உங்களுக்கும். உட்காருங்கள்.

4. தகவல் கோரல்.

எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள அறிவிக்கை

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே. இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்றைக்கு எரிந்து சாம்பலாகக்கூடிய அளவிற்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் சம்பந்தமாகத்தங்களிடத்திலே நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் மிகமிக முக்கியமானது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அது குறித்து நேற்று அதிகாரிகளிடத்திலும், முதல் அமைச்சர் அவர்களிடத்திலும் பேசியிருக்கிறேன். நான் பேசியவரையில் பல விவரங்களைச் சேகரித்திருக்க முடியும். எனவே, அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதனால், அந்தப் பகுதியில் அமைதியான சூழ்நிலை உருவாகும் என்ற காரணத்தினால், அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இராமநாதபுரம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த தாகச் சொன்னார்கள். அவர்களே இங்கே பேசுகின்றபோது, அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்களிடமும், அதிகாரி களிடமும் தொடர்பு கொண்டதாகச் சொன்னார்கள். காலை யிலே வானொலியிலும் இந்தச் செய்தி ஒலிபரப்பப்பட்டது. ஆகவே, அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பை அளித்திருக்கிறது; அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறபோது, அதை இன்றேஎடுத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையிலே எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் பேசியாக வேண்டும். நாளை எடுத்துக் கொள்ளலாம்.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "சென்னை சைதாப்பேட்டையில் அரசு ஊழியர் ஒருவரின் மனைவி 30-3-1981 அன்று பட்டப் பகலில் அடித்துக் கொலை செய்யப்பட்டு, நகைகள் திருடப்பட்டுள்ளதால், அப்பகுதியில் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று கேட்டு, திருவாளர்கள் ஆர். கருப்பையா, டி. கே. நல்லப்பன், எம். அப்பாத்துரை, ஆர். கிருஷ்ணன், என். வரதராசன், என். பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள் கிறேன். திரு. ஆர். கருப்பையா.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில், சைதாப்பேட்டையில் அரசு ஊழியருடைய மனைவி, அவர் தன்னுடைய வீட்டிலே இருக்கின்ற நேரத்திலே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். பொதுவாக அதனுடைய விவரங்களுக்குள் போகவேண்டிய அவசியம் அதிக மில்லை என்று கருதுகிறேன். இந்தப் படுகொலையைப்பற்றி அனைவரும் அறிவார்கள். அந்த அரசு ஊழியர் தன்னுடைய அலுவலகம் சென்றிருக்கின்ற நேரத்திலே, சற்றும் எதிர்பாராத நிலையில் அந்தப் படுகொலை நடந்திருக்கிறது. இது இந்த நகரத்திலே நடைபெற்றிருக்கிற முதல் கொலை என்றுகூடச் சொல்ல முடியாது, சென்னை நகரத்திலே தொடர்ச்சியாக இந்த மாதிரி கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்கள் அலுவலகங்களுக்குச் செல்லக் கூடிய நேரத்தில் இதுபோன்று ஏற்பட்டு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையில்